https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# நா. முத்துக்குமார் படைப்புகளில் உளவியல் சிந்தனைகள்

**ஜெ. சுவிதா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கற்பக விநாயகா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி
மதுராந்தகம், செங்கல்பட்டு

## ஆய்வுச் சுருக்கம்

ஒரு சமூகம் என்பது பல்வேறான மக்கள் தொகுதிகளை உள்ளடக்கியது. இச்சமூகத் தொகுதியில் படைப்பாளிகளும் வாழ்கின்றனர். இச்சமூகத்தின் சில நிகழ்வுகள் அவர்களைப் பாதிக்கின்றன. இதனால் தாக்கமடைந்த படைப்பாளிகள், தான் கண்ட சமூகத்தின் நிலைகளை, தமது படைப்புகளில் படம்பிடித்துக் காட்டுகின்றனர். அவர்கள் அறியாமலேயே, அவர்களது படைப்புகளில், சமுதாயப் பின்னணியை அமைப்பது உண்டு. தமது படைப்புகளில் தம்மையும், தம்மைச் சார்ந்தவர்களையும், தாம் சார்ந்து வாழும் இவ்வுலகினையும் படைத்தளிக்கிறார்கள். படைப்பாளி என்பவன் தனித்து இயங்குவதில்லை. அவன் சமூகம் என்ற கட்டுக்குள் அடங்கியவனே.

## முன்னுரை

தனிமனித சுதந்திரம், பெண்ணடிமை, இளவயது திருமணம், அறியாமை, சாதிசமயச் சிக்கல்கள் போன்றவை சமுதாயத்தைச் சூழத் தொடங்கியதைக் கண்ட இலக்கியப் படைப்பாளர்கள், இச்சமூகச் சிக்கல்களையும் அதிலிருந்து பெறும் சமூகச் சிந்தனைகளையும் பாடுபொருளாகக் கொண்டு படைப்புகளைப் படைத்தனர். அன்றாடம் நிகழும் நடப்பியல் வாழ்வை, படம்பிடித்துக் காட்டுவதால் கவிதைகள், மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. அந்த வகையில், நா.முத்துக்குமார் படைப்புகளில் காணும் சமூக உளவியல் கருத்துக்களை ஆராயும் முகமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## சமூகம்

தனி மனிதன் சமூகமாக முடியாது. அவ்வாறே தனி மனிதர்கள் பலர் சேர்ந்து வாழ்வதே சமூகம். சமூகம், சமுதாயம் என்ற இரு சொற்களும் ஒரே பொருளுடையன. மனிதர்கள் கூடிப் பல சமூகங்களாக வாழ்வது தான் உலகமாகும். இதனை சுபாசு, “தனிமனிதர்கள் பலர் ஒருங்கிணைந்து, தங்களுக்கிடையே சிலக் குறிப்பிட்ட நடை, உடை, பாவனைகளையும் தங்களுக்கு இடையேயான உறவுகளையும் வளர்த்துக் கொள்கின்றனர். இத்தகைய தனி மனிதர்களின் கூட்டங்களைச் ‘சமூகம்’ என்று குறிப்பிடலாம். சமூகவியலாளர், சமூகத் தொடர்புகளால் பின்னப்பட்ட வலையே சமூகம் எனக் குறிப்பிடுவதாகக் கூறியுள்ளார்.”[1] எனவே, ஒரு பரந்த நிலப்பரப்பில் தங்களுடைய அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொண்டு வாழும் மக்கள் கூட்டமே சமுதாயம் எனப்படும்.

சமூக அறிவியலின் கலைக்களஞ்சியம், “மனிதன் தன்னுடன் வாழ்வாரோடு கொள்ளும் அனைத்து வகைத் தொடர்புகளின் முழுமையைப் பற்றிக் குறிக்கும் ஒரு மிகப் பொதுவான

சொல் சமுதாயம் எனக் கருதலாம் எனச் சுட்டுகிறது"[2] மனிதன் சமூகமாக கூடிவாழும் இயல்பினன். ஆதலால் அவனுடைய ஒவ்வொரு நடவடிக்கையும், சமூகத்தின் மீது தாக்கத்தை உண்டாக்கவே செய்யும். தனிமனிதனின் செயல்பாடுகளை வைத்துத் தான் சமூகம் மதிக்கப்படுகிறது. இவ்வகை யில் சமூகமும், மனிதனும் தனித்தனியே பிரித்துப் பார்க்க முடியாமல் பிணைந்திரு ப்பது என்பது புலனாகின்றது.

"சமூதாயம் என்ற சொல் ஆறறிவு படைத்த மக்களினத்தோடு பிணைந்து நிற்கும் ஒன்று. ஆறறிவு படைத்த மக்கள் இனத்துள்ளும் உணர்வற்ற அடிப்படை உணர்வில்லாத மக்கள் கூட்டம் சமுதாயம் என்னும் சொல்லுக்கு இலக்கு ஆகாது."[3] என்று பரமசிவானந்தம் சமுதாயம் குறித்த எதிர்மறை உணர்வுகள் பற்றிய சிந்தனையைத் தருகின்றார். மேற்கண்ட கருத்துக்களை நோக்கும் போது சமுதாயம் என்பதை ஒரே சொற்றொடரில் வரையறுக்க வேண்டுமா னால் ஒழுங்குடன் இருப்பது என்பதாகும். ஒரு மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டுப் பிறருடன் கூடி வாழ்கின்றான். இந்தக் கூட்டு வாழ்க்கையே சமுதாயம் ஏற்படக் காரணமா யிருக்கின்றது என்பதை அறிய முடிகிறது.

## சமுதாய நோக்கம்

ஒரு சமுதாயத்தின் நோக்கம் என்பது, மக்கள் கூட்டம் மகிழ்ச்சியுடனும், ஒழுங்குடனும் வாழ்வதைக் குறிக்கின்றது. ஒவ்வொரு சராசரி மனிதனும் அரசியல் விளைவுகள், பொரு ளியல் சிக்கல்கள், அறிவியல் முன்னேற்ற ங்கள் ஆகியவற்றை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். சமுதாயம் வளம் பெற்றிட மேற்கண்ட துறைகளில் அறிவு பெற வேண்டும்.

இதற்கு, "சமூகவியலின் முக்கியக் குறிக்கோள் சமுதாயத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளைப் பற்றிய உண்மை அறிவைப் புகட்டி, மனிதனின் வாழ்க்கையில்எதிர்ப்படும் சமூகச் சிக்கல்களைத் தீர்க்க முயல்வதாகும்"[4] என்று கல்பகம் குறிப்பிட்டுள்ளார். பிறப்பில் தொடங்கும் மானிட வாழ்க்கை, தனி மனிதப் பண்பாடுகளுடன், சமூகப் பண்பாடு களையும் ஒட்டியதாக உள்ளது. தனிமனித நடத்தையை அடிப்படைக் கூறுகளான புலன் காட்சி கற்றல், நினைவாற்றல், சிந்தனை ஆளுமை போன்றவற்றின் மூலமாக அறிந்து கொள்கிறோம்.

இவற்றைப் போலவே சமூக நடவடிக்கை களை அறிய உளவியல் நோக்கில் சமூக மாற்றங்கள், ஆலோசிக்கும் தன்மை, பிரதிபலிப்பு நெறிமுறைகள், சமூக பயம், சமூக நெறி போன்றவற்றையும் பயன்படுத்தி, சமூக உளவியலானது நெறிமுறைப் படுத்தப்படுகிறது.

## தனிமனிதனும், சமூகமும்

தனிமனிதனின் பார்வையில் உண்பது, உறங்குவது, தன் பணியைச் செய்வது போன்ற செயல்களுக்கு அப்பால் பசி, பாலுணர்வு, ஓய்வு போன்ற உளவியல் நடத்தைகளும் நடைபெறுகின்றன. எனவே தனிநபர் சமூகத்துடன் இணைந்தே செயல்படுகிறான். "மனிதன் உறவைத்தேடி அலைபவனே. அவன் தனித்து வாழும் இயல்பைக் கொண்டவன் அல்ல. இதனால் தான் குடும்பத்தில் வாழக் கூடியவனாகவும், சமூதாயத்தில் வாழக் கூடியவனாகவும் காட்டப்படுகிறான். குடும்பத்தில் வாழும் போது, அவன் இரத்த உறவோடுப் பழகுகிறான். சமுதாயத்தில் அவன் பழகுவது உறவு முறைக்கு மீறிய பழக்கம் ஆகும். அதாவது இரத்த பந்தமற்ற உறவு என்று கொள்ள வேண்டும்"[5] என்று துளசி இராமசாமி பதிவு செய்துள்ளதைக் காண முடிகிறது.

தனிப்பட்டக் குடும்பங்கள் ஒவ்வொன்றும், தன்னலமின்றிச் செயல்படும் பொழுது, சமுதாய நோக்கம் முழுமையான வெற்றியைப் பெறுகிறது. சமுதாய நோக்கம் என்பது சுருங்கக் கூறின், பொது நலனில் ஆர்வமும்,ஈடுபாடும் கொண்டதாக இருத்தல் வேண்டும். சமுதாய நலனுக்காக ஒவ்வொரு உறுப்பினரும் சில இன்றியமையாத கட்டுப் பாடுகளைப் பின்பற்ற வேண்டும். சமுதாயத்தின் ஒரு சிறு பகுதியே சமுதாயக் கூறாகும். எடுத்துக்காட்டாக, குடும்பம், அரசு இவற்றைக் கூற முடிகிறது. இச்சிறு கூறுகள் இணையும் பொழுது சமுதாயம் முழு வடிவம் பெறுகிறது. தனிமனிதன், குடும்பம், அரசு, கல்வி, தொழில், சமயம் என ஆறு வகையாகச் சமுதாயக் கூறுகள் பாகுபடுத்தப் படுள்ளன. தனி மனிதனோ, குடும்பமோ மட்டும் சமுதாயம் ஆகாது. மேற்கூறிய ஆறு கூறுகளும் இணையும் போது தான்

சமுதாயமாக வடிவம் பெறும் என்பதை அறிய முடிகிறது.

குடும்பத்திற்கு வெளியே ஏற்படும் மானிட உறவுமுறைகளே சமூகத்திற்கு வழிவகுக்கின்றன. சமூகம் என்பது ஒரு குழுமம் - கூட்டு அமைப்பு என்னும் நிலையில் தான் அமையும். இதனை, "சமூகம் என்பது தனி மனிதரால் இணைக்கப்பட்ட கூட்டமாகும். இங்கு மனிதர் குறிப்பிட்ட உறவாலும், நடத்தை முறையாலும் இணைகின்றனர். இக்கூட்டத்தில் சேராதவர்களிடமிருந்து உறவு, நடத்தை ஆகியவற்றால் இவர்கள் வேறுபடுகின்றனர்"[6] என்று க.பாஸ்கரன் கூறியுள்ளார். எனவே, சமுதாயம் என்பது தனித்தனியே பிரிந்து கிடக்கும் கூட்டமன்று.

இச்சமூகத்தில் மனிதர்களிடையே ஒழுங்கு முறையாக உறவு காணப்படுகிறது. அவ்வுறவுகளின் அடிப்படையில்தான் குடும்பம், இனம், வகுப்பு போன்றவை அமைகின்றன. சமுதாய அமைப்பு முறையில் ஒன்றையொன்று சார்ந்து இருக்கும் நிலையைக் காண முடிகிறது. மனிதன் தனித்த வாழ்வில் மனநிறைவோ மகிழ்வோ கொள்ள முடியாது. அதனால் அவனுக்குச் சமூகம் என்ற அமைப்பு தேவைப்படுகிறது. சமூக நிலை காரணமாக அவன் சமுதாயத்தில் இருக்கின்றான்.

## இலக்கியமும், சமுதாயமும்

இலக்கியம் என்பது, ஒரு சமுதாய நிறுவனமாகக் கருதப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் சமுதாயம் இருந்த நிலைகளை அறிவதற்கு சிறந்த இலக்கியப் படைப்பாளர்கள் படைத்த நூல்கள் பெரிதும் துணை புரிகின்றன. காலந்தோறும மாறி வரும் மக்கள் உணர்ச்சிகளையும், பயன்பாடுகளையும் எடுத்துக்காட்டுவது இலக்கியமாகும். முற்கால, இடைக்கால, தற்கால இலக்கியங்கள் எனக் கூறுவதெல்லாம், ஒருவகையில் இலக்கியங்கள் பெற்ற மாற்றங்களைச் சுட்டும் குறியீடுகளாகும்.

தனிமனிதன் குடும்பம், சமூகத்தில் காணும் மனிதர்கள், அவர்களிடம் பெற்ற பாடங்கள், நேர்-எதிர்மறை எண்ணங்கள் சமூகத்தில் காணும் காட்சிகள் எனப் பல நிகழ்வுகள் ஒவ்வொரு மனிதனிடமும் அடங்கியுள்ளன. உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனையும், 'மானுடம்' என்ற பொதுப்பண்பில் அடக்க முடியும். எனினும் மனிதனின் செயல்பாடுகளை உற்று நோக்கும் போது, ஒவ்வொருவரிடமும் பல்வேறு நடத்தை முறைகளும் இயல்புகளும் காணப்படுகின்றன என்பதை அறிய முடியும்.

மனிதன் பிறரிடம் ஒவ்வொரு சூழலிலும் செயல்படும் அல்லது நடந்து கொள்ளும் விதம் அல்லது முறையே நடத்தையாகும். இதுபோல் மனிதப் பண்புகளை அம்மனிதர் பற்றிய நடத்தை முறைகளை ஆராயும் துறையே உளவியல். மனிதனின் அகவாழ்வு குறித்த மேம்பாட்டிற்கும் உயர்விற்கும் வழிவகுப்பதும் மனித உள்ளம். உள்ளத்தைத் தன்னகத்தே கொண்ட உடல், அவ்வுடலில் தோன்றும் உணர்வுகள், அவ்வுணர்ச்சிகளின் வெளிப்பாடாக அல்லது வடிகாலாகத் திகழும் நடத்தை ஆகியவற்றை உள்ளடக்கியதும் உளவியல் இலக்கியமாகக் கருதப்படுகிறது.

## படைப்பாளியும் உணர்வு வெளிப்பாடுகளும்

இலக்கியமும், மனிதனின் படைப்பு தான். இப்படைப்பில், படைப்பாளியின் கனவு, நனவு, விருப்பு, வெறுப்பு, சமுதாய நோக்கம், சமுதாயப் பயன்பாடு என்ற அனைத்தும் அடங்கும். இவ்வனைத்து உணர்வுகளையும், நோக்கங்களையும் படைப்பாளி, தனது அகமனமும், புறமனமும் இணைந்து காணும் மனிதர்களின் மூலம், வாசிப்பாளர்களிடையே உலவ விடுகின்றான். அவர்களின் மனச் செயல்பாடுகளையே இலக்கிய வழி உளப் பகுப்பாய்வு வெளிக் கொண்டு வருகிறது. எனவே, உளப்பகுப்பாய்வை உள்ளடக்கிய உளவியலும், படைப்புக் கலையுடன் தொடர்புடையதாகும்.

இலக்கியம் வாழ்க்கையின் வெளிப்பாடு. மனித மன எண்ணங்களை, மனத்தின் செயல்பாடுகளை மையமாகக் கொண்டது. ஒவ்வொரு எழுத்தாளனின் படைப்புகளும், அவனது அகமன அனுபவங்களின் பிரதிபலிப்பாகும். இவை சமூகச் சூழல்களில் வெளிப்படும் மனிதனின் நடத்தை மாறுபாடுகள் போன்றவற்றைச் சித்தரிக்கின்றன. இவை, வாசிக்கும் மனித உள்ளங்களை அது சுட்டும் உணர்ச்சி நிலைக்குக் கொண்டு செல்லும் ஆற்றல் இலக்கியத்திற்கு உண்டு.

படைப்பாளிகள் தம் மனதில் தேங்கிக்

கிடக்கும் உணர்வுகளை அவ்வாறே படைப்ப தில்லை. அவற்றைப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு, சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் முறையில் உருமாற்றி அவற்றை கவிதையா கவோ, நாடகமாகவோ, கதையாகவோ, கட்டுரையாகவோத் தருகின்றனர். படைப் பாளன் ஓர் அக நோக்காளன்.

இவனுக்கும், நரம்பு நோயாளிக்கும் மிகுந்த வேறுபாடு இல்லை. அவனது ஆசைகள் நிறைவேறாத போது, அவை மனத்திற் குள்ளே அழுத்தப்படுகின்றன. தன் மனதில் உள்ள எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வல்லமை உள்ளவனாக விளங்க வேண்டும் என்பதே இவனது வேட்கை. இதனைத் தன் படைப்பாக்கத்தின் மூலமே, படைப்பாளி நிறைவேற்றிக் கொள்கிறான். இவ்வாறு உருவாக்கப்பட்ட இலக்கியம், ஒரு சமுதாய நிறுவனமாக அமைகிறது.

இதனை, தா. வே.வீராசாமி, "ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் சமுதாயம் எவ்வாறு இருந்தது என்பதை அறிவதற்குச் சிறந்த இலக்கியப் படைப்பாளன் படைத்த நூல்கள் பெரிதும் துணை புரிகின்றன. இலக்கியம் என்பது காலந்தோறும் மாறி வரும் மக்கள் உணர்ச்சிகளையும், பயன் மதிப்புகளையும் எடுத்துக் காட்டுவதாகும். முற்கால இலக்கியம், இடைக்கால இலக்கியம், தற்கால இலக்கியம் எனப் பேசுவதெல்லாம் ஒரு வகையில் இலக்கியம் பெற்ற மாற்றங்களைச் சுட்டும் குறியீடுகள் ஆகும்"[7] என்று குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

### நா. முத்துக்குமார் படைப்புகளில் சமூக உளவியல்

மனிதனுடைய நடவடிக்கைகளை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தி, அவனுடைய புற வாழ்விற்கு வழி செய்வது இயற்கைத் தேவையாக அமைகிறது. "இயற்கை தன்னுடைய விதிகளு க்கு ஏற்பக் கடைப்பிடிக்கும் கூற்றுத் தேர்வு எனப்படும். ஆனால் சமூகம் தன்னுடைய சட்டங்களுக்கும் வழக்கங்களுக்கும் ஏற்ப உருவாக்குவது சமூகத் தேர்வாகும்"[8] என்று பாங்கல் கில்பர்ட் குறிப்பிட்டுள்ளார். இயற்கைத் தேவையை அடித்தளமாகக் கொண்டு மனிதன், சமூகத் தேர்வில் சிறப்பான பங்கு கொள்கிறான். இத்தகைய சமூக நிலையில், நா.முத்துக்குமார் தனது படைப்புகளில் தான் பிறந்து, வளர்ந்து, நினைவு தெரிந்த நாள் முதல் இறக்கும் வரை தான் கண்ட, கேட்ட, உணர்ந்த அனுபவங் கள், பழகிய மனிதர்கள், இவர்களின் வழி உணர்ந்த சமூகச் சிக்கல்கள், இதனால் ஏற்பட்ட மனஅதிர்வுகள் என இவற்றை யெல்லாம் பதிவு செய்துள்ளார். கீழக்கண்ட வகைகளில் அப்பதிவுகள் பகுத்து ஆய்வு செய்யப்படுகின்றன.

### வாழுமிடம் சார்ந்த பதிவுகள்

இளமைக்கால நினைவுகள் அனைவருக்கும் வசீகரமானவை. நினைவாற்றங்கரையில் நடந்து திரிவது என்பது சுகமானது. பெரும்பாலும் கிராமங்களிலோ, சிறு நகரங்களிலோதான் அனைவரின் பால்யக் காலம் அமைந்திருக்கிறது. பால்யத்தைக் கடந்தப் பின், பிழைப்புக்காக ஒரு வாழ்விடமாகவே மாநகரத்தைத் தஞ்சமடைய வேண்டிய பொறுப்பும், நிர்பந்தமும் பெரும் பாலானோருக்கு ஏற்படுகிறது. இங்குள்ளவர் களின் மனம், பல நெருக்கடிகளையும், சவால்களையும் எதிர் கொள்ளும் நிலையில் அமைந்துள்ளது. இம்முரண்பட்ட வாழ்நிலை யும், வயதுமே கிராமம், மாநகரம் பற்றிய மனபிம்பங்களை வடிவமைக்கின்றன.

பொறுப்புகளும், நிர்பந்தங்களுமற்ற பால்ய வயதின் நினைவுகள் அலாதியானவையாகும். நா.முத்துக்குமாரின் படைப்புகளில், கிராமம் பற்றிய பெருமையும் மாநகரம் பற்றிய கசப்பானவையும் எழுத்துக்களில் இல்லாதது இவருடைய மேலான மன நிலையைக் காட்டுகின்றது. இவரின் கட்டுரைகள் அனைத்தும், உயிரோட்டமான சலனங்களைக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. முத்துக் குமாரின் பால்ய வயது நினைவுகள், வாசிக்கும் வாசகர்களின் மனதில் உள்ள நினைவு எனும் நதியினுள், ஒரு கல்லென உள்ளிறங்கி, குமிழிகளையும், வளையங் களையும் உருவாக்கியபடி, நினைவுகளாக வந்து செல்லும்படி செய்கின்றன.

மன இயக்கங்களில் முக்கியமானது நினைவு கள். இது மனஇயக்க மாறுபாடுகளில் இழப்பு நிலைக்கு வருவதுண்டு. மன இழப்பு நிலை மூவகைப்படும். தன்னை மறந்த நிலை, இரட்டை வாழ்க்கை, துயில் நடை. குறிப்பிட்ட நபர்களையோ பழகிய இடத்தையோ, பிரியும் போது பிரிய மறுக்கும் பிரிந்து போகவும் வேண்டும். அதே சமயம் நினைவுகளை விட்டுப் போக மனம் மறுக்கும். வாழ்ந்தும் வாழாது போகவும்

போகாத நிலை இந்த இரட்டை வாழ்க்கையை,

"வாடகை வீட்டைக்

காலி செய்தேன்

நினைவுகளைக் குடியமர்த்தி"

என்கிறது ஒரு கவிதை. இதயம் இயங்கும் வரை நினைவுகள் வாழ்ந்து கொண்டே தானிருக்கும். சிலர் செய்தத் தியாகத்தாலும், வீரதீரச் செயல்களாலும் இலட்சியங்க ளாலும் மக்கள் நினைவுகளில் வாழ்ந்து கொண்டே இருப்பர். உடல் மறைந்தாலும் லட்சியங்கள் என்றும் மரணிப்பதில்லை என்பதனை சிற்பி,

"நினைவுகளுக்கு

மரணமில்லை

சமுதாயத்தின்

நாடி நரம்புகளில்

ஜீவரத்தமாய் சிலிர்த்துப் பாய்ந்த

லட்சியத் தலைவனே

உன் நினைவுகளுக்கு மரணமில்லை"[9]

என்று குறிப்பிட்டுள்ளார். இதமான கதைக் கூறும் மொழியில் சரளமாக ஒரு வித லயத்தோடு நகர்ந்து செல்லும் உரைநடை எல்லா காலங்களிலும் ஏற்குமென்று நம்பப்படுகிறது. இது போல ஆழ்மனதில் மறைந்திருக்கும் புதையலைத் தரும் உளவியலும் அவரது கட்டுரைகளில் நிறைந்துள்ளதைக் காண முடிகிறது. இதனை நா.முத்துக்குமார், "கிராமத்தில் பிறந்து, நகரத்தில் படித்து, மாநகரத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவன் நான். இந்த மூன்று நிலவியலும், இவை சார்ந்து என்னைக் கட்டமைத்துக் கொண்டிருக்கும் உளவியலும், ஆழ்மனத்தின் கிறுக்கல்களும் ஆனது"[10] கிராமம், நகரம், மாநகரம் என்ற நூலில் வரும் கட்டுரைகளில் வரும் மனுஷிகள், மனிதர்கள், சிறுமிகள், சிறுவர்கள், நிகழ்வுகள் அனைத்தும் நினைவலைகளில், வலுவான கயிற்றால் பிணைக்கப்பட்டு இருப்பதை உணர முடிகிறது. இக்கயிற்றில் சுருக்குப்பை யில் கடவுளை (பணம், விபூதி) வைத்திருக் கும் பாட்டி முதல் வீதியில் இறைக்கப் பட்டப் பூக்கள் வரை கூறியிருப்பதைக் காண முடிகிறது.

எல்லோருக்கும் தேநீர் வாங்கித்தரும் மார்க்சீயத் தோழர் முதல் கல்லூரியில் பலமுறைக் காதலித்து இறுதியில் சங்கநாதன் தெருவில் பிள்ளைக்குப் பால் பவுடர் வாங்கக் கடன் கேட்கும் மனிதன் வரை இணைத்துப் பேசியுள்ளார் முத்துக்குமார். நகரத்தில் வண்டியோட்டும் பெண்ணைத் தொடரும் நண்பரிலிருந்து, தான் எழுதியக் கவிதைகளை வெளியிட மாடுகளை விற்கும் கவிஞன் வரைக் கூற முடிகிறது.

## கிராமத்துப் பின்புல வாழ்வியற் சூழல்

கிராமங்கள் நகரங்களின் நேர்மறையானத் தோற்றத்தில் வெள்ளை மனதுடன், கொள்ளை அழகுடன் பிணைந்த உறவுகளு டன் இருக்கின்றனர். கிராமங்களின் பசுமையான இயற்கை காட்சிகள் என்றைக்கும் ந.முவின் நினைவில் நிற்பவை. கிராமங்களைப் பற்றி குறிப்பிடும் நா.முத்துக்குமார். பாட்டிகளின் சுருக்குப் பையில் உள்ள பணம், அதனோடு சேர்ந்து வரும் விபூதி மணம், கிராமங்களில் வளரும் குழந்தைகள், பனங்காயில் வண்டி செய்து, இந்தியாவின் சில பகுதிகளுக்கு செல்லப் போவதாகக் கூறிச் செல்வதும், பொன் வண்டுகளின் கொட்டாங்குச்சி எனும் அவற்றின் வாழ்விடங்கள், கெரிகலிக்காய் மரங்களின் பசுமையான இலைகள், மருத்துவ குணம் கொண்ட தும்பைப்பூ தேடும் காட்சி, தவளைகளும் பாம்புகளும் நிறைந்த கிணற்றுக்குள் குதித்து, அடி மணலை உள்ளங்கையில் எடுத்து மேலே வந்து மூச்சு வாங்கிய முதல் சவால், ஒவ்வொரு சிறவர்களிடமும் உருவாகும் காட்சி, அடித்து வரும் ஆற்று வெள்ளத்தில் புடவையை வலையாக வீசித் தலைப் பிரட்டைகளை மீன் என எண்ணிப் பிடிக்கும் போது ஏற்படும் ஏமாற்றம், கண்ணாமூச்சி, கபடி, பம்பரம் சிலம்பு, கோலி இவைகளிடம் விளையாடும் கிராமத்துக் குழந்தைகளின் மகிழ்ச்சி என்பது எங்கும் கிடைக்காத ஒன்றாக இருக்கிறது.

கிராமங்களில், மார்கழி மாதங்கள் பூசணிப் பூக்களுடன் விடிகின்றன. தெருவில் காணும் மாக்கோலங்கள், "தெருவடைந்த மாக்கோலத் தில் பூசணிப் பூக்கள் வைக்கும் குமரிகள், தெருக்கள் உருவானதற்கு அர்த்தம் கொடுக்கிறார்கள் இராமன் கால்பட்டு அகலிகை உயிர்ப் பெற்றது மாதிரி, இவர்களின் கைவிரல்கள் பட்டுத் தெருக்கள்

தங்கள் நூற்றாண்டுத் தன்மையைக் கலைத்து விடுகின்றன. மார்கழி மாதங்களின் விடியலில், இரவெல்லாம் வானம் சிந்திய பனித்துளிகளைக் கவிதைகளாய் மொழி பெயர்த்து வைத்திருக்கும் பூசணிப் பூக்கள்"[11] என்று கிராமங்களின் விடியற் பொழுதின் காட்சிகளைப் பதிவு செய்துள்ளார்.

சிறுவயதில் நா.முத்துக்குமார் மாட்டு வண்டியில் தான் பயணம் செய்து பள்ளிக்குச் செல்வது வழக்கம் அப்பொழுது தான் ரசித்த கிராமத்தின் இயற்கைக் காட்சிகளை, "வழி நெடுகக் கிராமங்கள். காலைக் கதிரொளியில், பச்சை வயல் வெளிகளில் நாற்று நடும் பெண்களின் முகங்கள், தூரத்துப் பனை மரத்தில் தச்சு வேலை செய்யும் மரங்கொத்திப் பறவைகள், கிளிகள் பறக்கும் பெருமாள் கோவில் கோபுரத்தின் பின்னணியில், புழுதி படர்ந்த வீதிகளில், வண்ண வண்ண பட்டு நூல்களை மூங்கில் கழைகளில் நீட்டிக்கட்டி சாயம் போடும் சாதாரண, எளிய கிராமத்து மனிதர்கள் வழிதோறும் இவன் ரசித்துக் கொண்டே வந்தான்"[12] என்று சமூகத்தின் காட்சிகளை, அழகாக நினைவுக் கூர்ந்து, பதிவு செய்துள்ளதைக் காண முடிகிறது.

கிராமத்தில், காதல் செய்வோர் கூடும், பார்க்கும் இடங்களாக, ஆற்றங்கரை நாணல் புதர்கள், கரும்புத் தோட்டங்கள், ஊர் பொதுக் கிணற்றடிகள், திருவிழாக்களில் நிகழும் தெருக்கூத்து இரவுகள், இங்கெல்லாம் சந்திக்கும் நிலையை, "இந்த ஒவ்வொரு இடங்களிலும் பாரதியும், செல்லம்மாவும் பாடிக்கொண்டே இருக்கிறார்கள் எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்தது இவ்விடமே!"[13] என்றுக் குறிப்பிட்டுள்ளார். காஞ்சிபுரம் என்றாலே பட்டு தான் நினைவில் வரும். நா. முத்துக்குமார் பிறந்து வளர்ந்த காஞ்சிபுரத்தில், கன்னிகாபுரம் என்ற கிராமத்தில், பட்டு நெசவுத் தொழிலே பிராதானமாக இருந்தது. இதை அன்றாடம் கவனித்து வளர்ந்ததை "அதிகாலையில் எழுந்து தெருக்களில் பட்டு நூலை நீளமானக் கட்டைகளில் படர விட்டுக் கஞ்சி போட்டுச் சிக்கெடுப்பார்கள், பாவு போடுதல் என்று இதற்கு பெயர். சிவப்பு, மஞ்சள், நீலம் என்று வானவில் படுத்துக் கிடப்பது மாதிரி தெருவே பட்டு நூல்களின் வண்ணங்களால் வசீகரமாக இருக்கும்[14] என்று தனது கிராமத்துத் தொழில் பணிகளைக் குறிப்பிட்டுள்ளார்.

### கிராமங்களில் கிரிக்கெட் விளையாட்டுகள்

எல்லா மனிதர்களின் மனதிற்குள்ளும், முழுவதும் நிரப்பப்படாத குறுக்கெழுத்து போட்டியின் கட்டங்களைப் போல, ஒரு கடந்த காலம் புதைந்திருக்கிறது. ஒவ்வொரு முறையும், அதற்குள் இறங்கி இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும், நாம் பயணிக்கும் போது ஒன்றுக்கொன்று தொடர்புடைய சம்பவங்களின் தொடக்கப் புள்ளிகள் நம்மை மர்மமானதொரு திசைக்கு அழைத்துச் செல்கின்றன. இத்தகைய நினைவுகளின் சுவடுகளாக தான் சிறுவயதில் விளையாடிய விளையாட்டுகளும் என்றும் நினைவில் நிற்பவை. கிராமங்களில் கிரிக்கெட் விளையாட்டு பற்றி,

"தென்னை மட்டையில்
செதுக்கிய பேட்
சைக்கிள் டியூபில்
செய்த பந்து
ஆடாதொடை
குச்சிதான் ஸ்டெம்பு
விதிகள் எதுவும்
யாருக்கும் தெரியாது
மட்டையில் பட்டால் ரன்
குச்சியில் பட்டால் அவுட்
எல்லாம் தெரிந்ததாய்
எல்லோரும் நினைத்தாலும்
ரொம்ப நாள் வரை
கவாஸ்கருக்கும் கபில்தேவுக்கும்
வித்தியாசம் தெரியாது
சமயத்தில் ஆட்டம்
சுவாரசியமாய்ப் போகையில்
நிறையப் பந்துகள்
சிறைபட்டிருக்கின்றன
நாயக்கர் தோட்டத்து
நீரில்லா கிணற்றில்
செவன் ஸ்டார் டீம் என்று
வளரத் தொடங்குகையில்
வாழ்க்கை திசைமாற
நகரத்தில் மேற்படிப்பு
ஸ்லிப்பு தெரியலையா
நீயெல்லாம்
பந்து பொறுக்கக்கூட லாயக்கில்லை
சகமாணவர்களின்
கேலிகளுக்கிடையில்

*இருந்த ஆர்வமும் போயிற்று*
*இப்போதெல்லாம்*
*கலைப்பது உறுதி - சு.சுவாமி பேட்டி*
*அண்ணியுடன் தொடர்பு*
*தம்பி படுகொலை*
*செய்திகள் நடுவே*
*கிரிக்கெட் போட்டியில்*
*இந்தியா வெற்றி*
*என படிக்கையில்*
*புன்னகைப்பதோடு சாரி"*[15]

இவ்வாறு பதிவு செய்துள்ளார். இந்த மட்டைப்பந்து விளையாட்டை ரசித்து விளையாடியது பற்றியும், பின் அதன் மேல் ஏற்பட்ட ஆர்வமின்மை பற்றியும் கூறிய முத்துக்குமார், இந்தியா பாகிஸ்தான் இடையே நிகழ்ந்த அணுகுண்டு போரை மட்டைப்பந்து விளையாட்டுச் செய்திகளாக கற்பனையோடு வாசித்த கவிதை,

*"காமன் வீக் நாடுகளுக்கிடையேயான*
*அணுகுண்டு போட்டியில்*
*நேற்று காலை*
*இந்தியா*
*ஐந்து அணுகுண்டு போட்டது*
*பிற்பகல் தொடங்கிய*
*ஆட்டத்தில்*
*பாகிஸ்தான் ஆறு குண்டுகள் போட*
*மாலையில்*
*மீண்டுமொரு குண்டு போட்டு*
*விளையாட்டை சமன் செய்தது இந்தியா!*
*டிராயர் இல்லாத*
*இரு நாடுகளும்*
*டிராவில் முடிந்தன"*[16]

என்று எழுதியுள்ளதைக் காண முடிகிறது.

படைப்பாளன் தான் அனுபவத்தில் கண்ட, கேட்ட, படித்தவற்றை சமூகத்தின் செய்தியாக தருவதில் முனைப்புடன் செயல்படுவதை நா.முத்துக்குமாரின் படைப்புகளின் வழி பேசப்பட்டுள்ளன.

## முடிவுரை

சமுதாயம், சமுதாயநோக்கம், தனிமனிதனும் சமூகமும், சமூக உளவியல், இலக்கியமும் சமுதாயமும், படைப்பாளியும் அவனுடைய உணர்வு வெளிப்பாடுகளும் குறித்துக் கூறப்பட்டுள்ளன. நா.முத்துக்குமார் படைப்புகளில் சமூக உளவியல், வாழுமிடங்களின் வருணனைகள், கிராமப் புற சித்தரிப்புகள், கிராமங்களில் தொலைக்காட்சி அறிமுகம், வீடுகளின் உளவியல், நா.முத்துக்குமாரின் சிந்தனை, கிராமத்தில் புகை வண்டியும் புகைவண்டி நிலையங்களும் போன்றவற்றை முத்துக்குமாரின் படைப்புகள் காட்சிப் படுத்தியுள்ளன. நகர, மாநகர சித்தரிப்புகளில், நகர, மாநகர காதல் நிலைகள் 'இவர்கள்' முக்கியமாக இருக்கும் இடங்கள், வாடகை வீடுகளில் வசிப்போரின் அவமரியாதைகளும், இடர்களும், அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியில் நகரம், மாநகரம், பணம் எடுக்கச் சென்ற கடவுள், புகைப்படங்களின் வளர்ச்சி, மாறி வரும் விருந்தோம்பலும் வரவேற்பும் என இவைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

வாழ்வியல் பார்வைகளில், சமூகத்தின் பொது இடங்களில் காணும் மனித நேயம், காவலர்களின் பணி செய்யும் கடமை, எழுத்தாளர்கள், புத்தகங்களின் நிலை, பெண்கள் பற்றிய சமூக உளவியல் சிந்தனைகள், வறுமை நிலை, தொழிலாளர் நிலை, அரசியல் பார்வை, விவசாயம், விவசாயிகளின் நிலை மற்றும் பிறச் செய்திகள் குறித்தும் பேசப்பட்டுள்ளன. மொத்தத்தில் இவ்வாய்வில் சமூகப்பார்வை யும் அது குறித்த உளவியல் கருத்துக்களை யும் குறித்து ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## சான்றெண் விளக்கம்

1. சுபாசு, எது புதுக்கவிதை, பக். 106 - 107.
2. Encyclopedia of the Social science, P. 225.
3. அ.மு. பரமசிவானந்தம், சமுதாயமும் பயன்பாடும், ப.24.
4. கல்பகம், இரா., சமூகவியல், ப.2.
5. துளசி இராமசாமி, தமிழ்ச் சமுதாயம் நாட்டுப்புறப் பயன்பாடும், பக். 13 -14.
6. க.பாஸ்கரன், சமுதாய தத்துவம், பக்.26 - 27.
7. தா.வே.வீராசாமி, தமிழில் சமூக நாவல்கள், ப.3
8. ஜெ.நாராயணன், சமூக மாற்றத்தின் வளர்ச்சி, முன்னுரை.
9. சிற்பி, கவிதைகள்..
10. நா.முத்துக்குமார், கிராமம், நகரம், மாநகரம், ப.10.
11. மேலது, ப.23.
12. நா.முத்துக்குமார், வேடிக்கைப் பார்ப்பவன், ப.039.
13. மேலது, ப.048.
14. நா.முத்துக்குமார், கிராமம், நகரம், மாநகரம், ப.28.
15. நா.முத்துக்குமார், கவிதைகள், பக். 18 - 19.
16. நா.முத்துக்குமார், பச்சையப்பனிலிருந்து ஒரு தமிழ் வணக்கம், ப.15.